Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.40/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கே. கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி** ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு **317**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.02.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாந்தோனிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.10.2016ம் தேதி பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலையப் பொறுப்பில் இருந்தபோது பகல் 12

s/d. K. Ambiga

கே. கணேசன்

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

மணியளவில் சீனிவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று பசுபதிபாளைய காவல் நிலைய குற்ற எண். 638/2016 ச.பி. 379 இ.த.ச. வின் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-5. பின்னர் அன்றே 13 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சினிவாசன், ரகுராமன் முன்னிலையில் பார்வை இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ-6 ஆகும். சாட்சிகள் 1 முதல் 3 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரியவந்ததன் பேரில் எதிரியை தக்க புலன் வைத்து தேடி வந்தததில் 05.10.2016ம்தேதி மதியம் 15.15 மணிக்கு வெங்கக்கல்பட்டி அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது அவ்வழியாக வந்த **TN** 57 **L** 6953 என்ற ஆம்னி வேனை மறித்தபோது நிக்காமல் சென்றதால் போலிஸ் பார்ட்டியுடன் வளைத்து பிடித்து சோதனை செய்தபோது ஆம்னி வேனை ஓட்டி வந்தவர் முன்னுக்குப் பின் முரணாக கூறி பிறகு தனது பெயர் சலீம் என்றும் ஆம்னி வாகனத்தில் லாரி டயர், டியூப்களை திருடி ஏற்றி வந்ததாகவும், சாட்சிகள் கருணாநிதி பாலசுப்பிரமணியம் என்பவர்கள் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "நான் திருடி வச்சிருந்த டயரையும் டியூபையும் திருடப்பயன்படுத்தின ஆம்னி காரையும் உங்ககிட்ட ஒப்படச்சேன். என்ன கூட்டிட்டு போனிங்கனா அன்னைக்கு நான் டயர் டியூப் திருடின இடத்தை அடையாளம் காட்டுகிறேன் " என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ-7 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி டயர், டியூப், பயன்படுத்திய ஆம்னி காரையும் ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னைிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 8 ஆகும். பின்னர் நிலையம் கொண்டு வந்து எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். புகார்தாரர் சீனிவாசனை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகாரில் 4 டயர் மட்டும் காணாமல் போயிருந்ததாக சொல்லியிருந்தார்.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 7 டயர் மற்றும் 20 லாரி டியூப்களை கைப்பற்றியது குறித்து விசாரித்தபோது புகார்தாரர் சீனிவாசன் பதட்டத்தில் நான்கு டயர்கள் காணாமல்போனதாக கூறியதால் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய டயர்கள் மற்றும் டியூப்களையும் திருடுவதற்குப் பயன்படுத்திய ஆம்னி வேனையும்

s/d. K. Ambiga

கே. கணேசன் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ-9 ஆகும். கருணாநிதி மற்றும் பாலசுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் எதிரி மீது ச.பி. 379 இ.த.ச.வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

கே. கணேசன்